இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 28.08.2026

# காக்ரோச் தலைவரின் கணிப்பு!

“இந்தியாவின் சிறந்த முதலமைச்சராக திகழ்ந்தார் மு.க.ஸ்டாலின்” என்று CJP நிறுவனர் அபிஜித் தீப்கே புகழாரம் சூட்டி இருக்கிறார்.

**தனியார் தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய ஜென் ஸீ கருத்தரங்கில் கலந்து கொண்ட கரப்பான்பூச்சி ஜனதா கட்சித் தலைவர் அபிஜீத் தீப்கேவிடம், “இந்தியாவின் சிறந்த முதல்வர்கள் யார்?” என்று நெறியாளர் கேள்வி எழுப்பினார்.**

**அதற்கு, “தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின், கேரளாவில் பினராயி விஜயன், டெல்லியில் அரவிந்த் கெஜ்ரிவால்” என்று அபிஜீத் தீப்கே பதிலளித்தார்.**

“தமிழ்நாட்டை பொருளாதாரத்தில் சிறந்த மாநிலமாக மு.க. ஸ்டாலினும், கேரளத்தை சுகாதாரத்தில் சிறந்த மாநிலமாக பினராயி விஜயனும், டெல்லியை கல்வியின் சிறந்த மாநிலமாக அரவிந்த் கெஜ்ரிவாலும் மாற்றினார்கள்” என்று அவர் குறிப்பிட்டார்.

இதைவிடச் சிறந்த பாராட்டு இருக்க முடியாது. இது இந்திய அளவிலான பாராட்டாக அமைந்துள்ளது. இளைய தலைமுறையின் பாராட்டாக அமைந்துள்ளது. இளைய தலைமுறையை ஒருங்கிணைக்க அபிஜீத் திப்கே என்பவரால் இந்த ஆண்டு தொடங்கப்பட்ட கட்சி இது. இளைஞர்களை அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட கட்சி இது. கல்வித் துறையில் முறைகேடுகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறது. வேலைவாய்ப்பின்மைக்கு எதிராகக் குரல் கொடுக்கிறது.

நீட் தேர்வை முறைப்படுத்தவும், நீட் தேர்வில் இதுவரை நடந்த முறைகேட்டுக்கு பொறுப்பேற்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகவும் வலியுறுத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் மிகப்பெரிய போராட்டத்தை இந்த அமைப்பு நடத்தியது. மிகப்பெரிய போராட்டமாக அது வெடித்தது. அராஜகமான வகையில் மாணவர்கள், இளைஞர்களை ஒடுக்கியது டெல்லி போலீஸ். ஆனாலும் அவர்கள் போராட்டத்தை வீரியமாக நடத்தினார்கள். வேறு வழியில்லாமல் தர்மேந்திர பிரதான் பதவி விலகினார். இது கரப்பான் பூச்சி ஜனதா கட்சிக்கும், அதன் தலைவர் அபிஜீத் தீப்கேவுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கணிக்கப்பட்டது. இத்தகைய அபிஜித் தீப்கே தான், முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை புகழ்ந்துள்ளார்.

**“இந்தியாவின் சிறந்த முதலமைச்சராக திகழ்ந்தார் மு.க.ஸ்டாலின்” என்று CJP நிறுவனர் அபிஜித் தீப்கே சொல்லி இருப்பது, தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழ் எந்தளவுக்குச் சென்றுள்ளது என்பதை உணர்த்துகிறது.**

**‘அனைத்துத் துறையிலும் தமிழ்நாட்டை வளர்த்தெடுத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்’ என்றும், ‘இந்தியாவில் தலைசிறந்த முதலமைச்சராக உயர்ந்து நிற்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்’ என்றும், ‘திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களை இந்தியாவின் பல மாநிலங்கள் பின்பற்றத் தொடங்கி இருக்கிறது’ என்றும் சொன்ன போது இங்குள்ள சிலர் விமர்சனம் செய்தார்கள். ஆனால் இது உண்மைதான் என்பதை இந்தியாவுக்கு வெளியில் உள்ளவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்பதைத்தான் காக்ரோச் கட்சித் தலைவரின் கணிப்பு உணர்த்துகிறது.**

2024-25 ஆம் நிதி ஆண்டில் 11.19 விழுக்காடு வளர்ச்சியை தமிழ்நாடு கண்டது. இதே சாதனை தொடர்ந்ததும் சாதாரணமானது அல்ல. 2025-26 ஆம் நிதி ஆண்டில் 10.83 விழுக்காட்டை தக்க வைத்து இரட்டை இலக்க சாதனையை இரண்டாவது முறையும் மெய்ப்பித்துக் காட்டினார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். “நம்முடைய போட்டி என்பது மற்ற இந்திய மாநிலங்களுடன் அல்ல. தெற்காசியாவில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு உயர வேண்டும்” என்று நெஞ்சுயர்த்திச் சொன்னார்.

**இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2024-25 ஆகிய ஆண்டில் 6.5 விழுக்காடாக இருந்தது. அப்போது தமிழ்நாட்டை 11.19 விழுக்காடாக உயர்த்தியதுதான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனையாகும்.**

**இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி 2025-26 ஆகிய ஆண்டில் 7.4 விழுக்காடாக இருக்கும் போது தமிழ்நாட்டின் வளர்ச்சியை 10.83 ஆக உயர்த்தியதுதான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனையாகும்.**

“இந்தச் செயல்பாடு, மாநிலத்தின் வலுவான கொள்கைக் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு வலிமைகளை எடுத்துக்காட்டி, இந்தியாவின் வளர்ச்சிக்கு ஒரு முன்னணிப் பங்களிப்பாளராக அதை நிலைநிறுத்துகிறது.” என்று பொருளாதார அறிஞர் கே.ஆர். சண்முகம் (மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் முன்னாள் இயக்குநர் மற்றும் தமிழ்நாட்டின் பொருளாதார ஆலோசகர்) குறிப்பிட்டார். இதுதான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனையாகும்.

இது ஏதோ பொருளாதாரப் புள்ளி விபரம் மட்டுமல்ல. இது பொதுமக்கள் மத்தியிலும் தெரிந்தது. மக்களும், மாவட்டங்களும் மலர்ந்தது. ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற மக்கள் நலன் காக்கும் குணத்தையும், ‘அனைத்திலும் வளர்ச்சி’ என்ற மாநில வளர்ச்சி காக்கும் திட்டத்தையும் ‘திராவிட மாடலின்’ அடித்தளமாகச் சொல்லி இந்தச் சாதனைகளை மு.க.ஸ்டாலின் செய்தார்.

**அனைத்து துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து மக்கள் வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்பதை இலக்காக வைத்து செயல்பட்டார். தொழில் வளர்ச்சியைப் போலவே அனைத்து துறைகளும் கவனிக்கப்பட்டன. அதனால் தான் சமூக வளர்ச்சிக் குறியீட்டிலும் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்தது.**

**அரசியல் ரீதியாக முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தோற்கடிக்கப்பட்டு இருக்கலாம். இதனால் அவருக்கு இழப்பு அல்ல. தமிழ்நாட்டுக்குத்தான் இழப்பு என்பதைத் தான் மூன்று மாதங்களாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். சினிமா கவர்ச்சியை மட்டுமே மூலதனமாகக் கொண்டு மக்களை ஏமாற்றி விஜய் என்ற நடிகர் ஆட்சியைக் கைப்பற்றி, முதலமைச்சர் பதவியை வைத்து என்ன செய்வது என்று தெரியாமல் மூச்சுத் திணறிக் கொண்டு இருக்கிறார்.**

மூன்று மணிநேரம் படம் முடிந்ததும் மொத்ததும் மறந்து விடுவதைப் போலத்தான் மக்களும் ஏமாற்றத்தில் இருக்கிறார்கள். ‘நல்ல திறமையான முதலமைச்சரை தோற்கடித்துவிட்டோமே’ என்று வருத்தப்படும் மக்கள் அதிகமாகி வருகிறார்கள். பரந்தூர் விமான நிலையத்தை ரத்து செய்ததன் மூலமாக தமிழ்நாட்டின் வளர்ச்சியை இளைய சமுதாயத்தின் வாய்ப்புகளை குழிதோண்டிப் புதைத்து விட்டார் விஜய். இப்படி ஒருவரை தேர்ந்தெடுத்து விட்டோமே என்று ஜென் ஸீ இளைஞர்கள் பதிவு போட்டு வருகிறார்கள். இப்போது வருத்தப்பட்டு என்ன பயன்?

**தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் உயர்த்திய, வளப்படுத்திய, மேன்மைப்படுத்திய மாமனிதராம் மு.க.ஸ்டாலின் அவர்களை உணராமல் போனதே தமிழ்நாட்டு இளைய சமுதாயம் என்று நாம் வருத்தப்படும் நிலையில் காக்ரோச் கட்சித் தலைவரின் கணிப்பு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தருகிறது. நன்றி அபிஜீத் தீப்கே!**



# நேபாளத்தில் காட்டாற்று பெருவெள்ளம்: இந்தியர்கள் 288 பேர் உள்பட 750 சுற்றுலாப் பயணிகள் மாயம்!



## இதுவரை 190 பேர் உயிரிழப்பு! தமிழ்நாட்டைச் சேர்ந்த 103 பேர் சிக்கியுள்ளனர்!

காத்மாண்டு, ஆக.28-

கோஷி ஆற்றில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளமானது இன்னும் சில மணி நேரங்களில் பீகாரை தாக்கும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நேபாளத்தில் திபெத் எல்லைக்கு அருகில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், கிராமத்திற்குள் புகுந்த வெள்ள நீரால் வீடுகள் அடியோடு அடித்துச் செல்லப்பட்டன. சாலைகள் மற்றும் பாலங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன. இதில், ஏராளமான பொதுமக்களும் இழுத்துச் செல்லப்பட்டனர். இதுவரையில் 190 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்து மீட்பு மற்றும் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளான சியாப்ரு மற்றும் திமுரே ஆகிய இடங்களில் மீட்பு ஹெலிகாப்டர்கள் தரையிறங்க முடியாததால் மீட்பு பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும், கரையோரம் வசிப்பவர்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் பிரதமர் பாலேந்திர ஷா அறிவுறுத்தியுள்ளார்.

### இந்தியர்கள் மாயம்

நேபாளத்தை கடந்து திபெத்தில் உள்ள கியிரோங் பகுதியில் பெரும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், பலர் காணாமல் போனதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்த வெள்ளத்திற்கு பிறகு 288 இந்தியர்கள் உட்பட 750 வெளிநாட்டினர் மாயமாகி உள்ளனர். அதில் 17 பேர் மலேஷியாவையும், 12 பேர் பிரிட்டனையும், 4 பேர் தென் ஆப்ரிக்காவையும், ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்தை சேர்ந்த தலா ஒருவர், அமெரிக்காவை சேர்ந்த 3 பேர் பற்றிய தகவல் இல்லை. எஞ்சியவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்ற தகவல் ஏதும் இல்லை.

கைலாஷ் யாத்திரை சென்ற நிலையில் தமிழகத்தை சேர்ந்த 103 பேர் பெருவெள்ளத்தில் சிக்கிய நிலையில், ஒரு பஸ்சில் பயணித்த 22 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த திடீர் வெள்ளத்தில் 32 போலீசார் மற்றும் ஆயுதப்படையைச் சேர்ந்த எட்டு பேர் என மொத்தம் 40 பேர் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

### பீகாரை தாக்கும் வெள்ளம்

நேபாளத்தின் கோஷி ஆற்றில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளமானது இன்னும் சில மணி நேரங்களில் பீகாரை தாக்கும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சூழலை அதிகாரிகள் தீவிரமாக கண்காணிக்கவும், மாநில, தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் தயார் நிலையில் இருக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேபாள வெள்ளத்தில் சிக்கிய தமிழர்கள் - உதவி எண்கள் அறிவித்த தமிழ்நாடு அரசு

India: 1800 309 3793

To contact: +91 8069009901 / 08069009901

Missed call: +91 8069009900 / 08069009900

காத்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட உதவி எண்கள்

+977 985 131 6807 - +977 970 910 7500

இந்நிலையில் பனிப்பாறை உடைந்து லெண்டே ஆற்றில் விழுந்ததால் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நேபாள வெள்ளப்பெருக்கு மிகுந்த கவலையளிக்கிறது!

# மக்கள் பத்திரமாகத் தாய்நாடு திரும்ப விழைகிறேன்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஆக.28-

நேபாள வெள்ளப் பெருக்கு குறித்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:



நேபாளத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு குறித்த செய்திகள் மிகுந்த கவலையளிக்கின்றன. பல்வேறு மனித உயிர்கள் பலியாகியிருக்கும் சூழலில் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும் அங்கு சிக்கியிருக்கின்றனர்.

ஒன்றிய அரசும் மாநில அரசும் விரைந்து செயல்பட்டு, நமது மக்கள் பத்திரமாகத் தாய்நாடு திரும்ப வேண்டுமென்று விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டை சேர்ந்த 103 சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்க!

# நேபாள வெள்ளத்தில் சிக்கிய இந்தியர்களை உடனடியாக மீட்க வேண்டும்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு தயாநிதி மாறன் எம்.பி. அவசரக் கடிதம்!

சென்னை, ஆக. 28-

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் பெருவெள்ளம் மற்றும் கடும் நிலச்சரிவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 103 பேர் உள்ளிட்ட பல இந்திய சுற்றுலா பயணிகள் சிக்கியுள்ளதுடன் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பாதிக்கப்பட்ட இந்தியர்களை மீட்கக் கோரி, கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.



அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

“கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உங்கள் கவனத்தை ஈர்க்க, இக்கடிதத்தை எழுதுகிறேன். நேபாளத்தில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளத்தால், தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 103 பேர் உட்பட இந்திய சுற்றுலாப் பயணிகள் எதிர்கொண்டுள்ள துயரமான நிலை மற்றும் அங்கு நிலவும் தீவிரமான சூழல் குறித்து உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

இப்பேரிடரால் சாலைகள், பாலங்கள் மற்றும் பிற முக்கிய உள்கட்டமைப்புகள் அடித்துச் செல்லப்பட்டும்; தகவல் தொடர்பு அமைப்புகளைக் கடுமையாகப் பாதித்தும் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது. இந்த பேரழிவில் பலரும் உயிரிழந்துள்ளதாகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 103 சுற்றுலாப் பயணிகள் உட்பட பலர் காணாமல் போயுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளையில், கடினமான நிலப்பரப்பு மற்றும் தொடர்ந்து நீடிக்கும் வெள்ளச் சூழல் காரணமாக மீட்புப் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வேகமாக மாறிவரும் சூழ்நிலைகள் மற்றும் தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் காரணமாக, தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினர் மத்தியில் மிகுந்த கவலை நிலவுகிறது.

எனவே, இப்பேரிடரால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்திய சுற்றுலாப் பயணிகள் மற்றும் பிற இந்தியக் குடிமக்கள் அனைவரையும் கண்டறிந்து, மீட்டு, பாதுகாப்பதை உறுதிசெய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு வேண்டுகிறேன்! சிக்கித் தவிக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்புவதற்கு உதவுமாறு இந்தியத் தூதரகம் மற்றும் மீட்புக் குழுக்களுக்குத் தயவுசெய்து உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.”

இவ்வாறு தயாநிதிமாறன் எம்.பி. தனது கடிதத்தில் கூறியுள்ளார்.